**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE OF KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | STC 587/2025 |
| Deposition of Witness | : | PW–1 |
| Name | : | சண்முகம் |
| Father/Husband Name | : | கன்னியப்பன் |
| Village | : | குண்டடம் |
| Taluk | : | தாராபுரம் |
| Age | : | 41 |

Accused present

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது குண்டடம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.05.2020 ம் தேதி காங்கேயம் காவல் நிலைய உதவி ஆய்வாளராகிய நானும், தலைமைக்காவலர் 1609 லோகநாதன் மற்றும் காவலர் 767 காமராஜ் ஆகியோர்கள் காலை ரோந்து மற்றும் குற்றத்தடுப்பு சம்மந்தமாக புறப்பட்டு காங்கேயம், பாப்பினி, நத்தக்காடையூர் ஆகிய காவல் நிலைய சரகப் பகுதிகளில் ரோந்து சுற்றி கண்காணித்துக்கொண்டு இருக்கும்போது கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காலை 5.45 மணியளவில் அரண்மனைக்காடு அருகில் சென்று கண்காணித்த போது ஆஜர் எதிரி பாலமுருகன் த/பெ. அங்கப்பன் நாடார் அவரது வீட்டிற்கு வெளியில் தென்னங்கீற்றால் ஆன குடிசையில் கண்காணித்தபோது போலீசாரான எங்களை கண்டதும், ஒரு ஆண் நபர் சுமார் 10 லிட்டர் பிடிக்கக்கூடிய ஒரு பச்சை நிற பிளாஸ்டிக் குடத்தை தூக்கிக்கொண்டும், மற்றொரு நபர் சுமார் 5 லிட்டர் பிடிக்கக்கூடிய கருப்பு நிற பேரலையும் தூக்கிக்கொண்டு தப்பி ஓட முயன்றவரை உடன் இருந்த

காவலர் உதவியுடன் மடக்கி பிடித்து விசாரித்தபோது பச்சை நிறக்குடத்தை வைத்திருந்தவர் தனது பெயர் பாலமுருகன் (39), த/பெ. அங்கப்பன் நாடார், அரண்மனைக்காடு என்றும், கருப்பு நிற பேரலை வைத்திருந்தவர் தனது பெயர் சரவணமூரத்தி (36) த/பெ.துரைசாமி, அரண்மனைக்காடு என்றும் கூறினார்கள். பாலமுருகன் கையில் வைத்திருந்த சுமார் 10 லிட்டர் பிடிக்கக்கூடிய பச்சை நிற பிளாஸ்டிக் குடத்தை மேலே கட்டப்பட்டிருந்த பாலீத்தின் கவரை திறந்து சோதனை செய்து நுகர்ந்து பார்த்தபோது சாராயத்துடன் கூடிய விஷவாடை வீசியது. அதில் சுமார் 5 லிட்டர் சாராயம் இருந்தது தெரியவந்தது. பின்னர் சரவணமூரத்தி வைத்திருந்த கருப்பு நிற பேரலையும் பார்க்க அதில் சுமார் 15 லிட்டர் சாராயம் தயாரிப்பதற்கான ஊரல் இருந்தது தெரியவந்தது. மேலும், இருவரையும் விசாரிக்க கொரானா ஊரடங்கால் டாஸ்மாக் கடையில் மூடப்பட்டுள்ள சமயத்தில் பிராந்திகள் எதுவும் கிடைக்காததால் இந்த நேரத்தில் சாராயம் காட்சி அதிக விலைக்கு விற்பனை செய்து லாபம் சம்பாதிக்கலாம் என்று எண்ணி அரசு அனுமதியின்றி சட்ட விரோதமாக விஷ சாராயத்தை தயாரித்து குடிக்கவும், விற்பனை செய்வதற்காகவும், வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவர்களை அதே இடத்தில் வைத்து 6.00 மணிக்கு நாங்கள் கைது செய்தும் அங்கிருந்த பொதுஜன சாட்சிகள் சரவணக்குமார், ஜோசப் ஆனந்த் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி பாலமுருகன் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 6.15 மணிக்கு பதிவு செய்தும், அவர் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் பெயரில் அவர் எடுத்து ஆஜர் செய்த சுமார் 10 லிட்டர் பிடிக்கக்கூடிய பச்சை நிற பிளாஸ்டிக் குடத்தில் இருந்த சுமார் 5 லிட்டர் அளவுள்ள விஷ சாராயத்தை குடத்துடனும், எதிரி வீட்டிற்கு அருகில் மறைத்து வைத்திருந்ததை அடையாளம் காட்டி ஆஜர் செய்த சாராயம் தயாரிக்க பயன்படுத்திய விரகு அடுப்பு, ஈயவானக்குண்டா,

சில்வர் குண்டா ஆகியவற்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 7.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர் எதிரி சரவணமூர்த்தி என்பவர் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 7.45 மணிக்கு பதிவு செய்து அதில் எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின் எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் பெயரில் அவர் ஆஜர் செய்த சுமார் 5 லிட்டர் பிடிக்கக்கூடிய கருப்பு நிற பிளாஸ்டிக் பேரலையும், விஷ சாராயம் தயாரிக்க போடப்பட்டிருந்த சாராய ஊரலை பேரலுடன் அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 8.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். எதிரி பாலமுருகனிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பச்சை நிற பிளாஸ்டிக் குடத்தில் இருந்த சுமார் 5 லிட்டர் விஷ சாராயத்தில் இருந்து ரசாயன பகுப்பாய்விற்காக 180 மிலிட்டர் பிடிக்கக்கூடிய இரண்டு கண்ணாடி பாட்டில்கள் தலா 180 மி லிட்டர் எடுத்து அதை மூடி காடா துணியை சுற்றி SHO சீல் வைத்தும், அதில் S1, S2 என்று குயியீடு செய்தும், வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை சம்பவ இடத்திலேயே வைத்தும் பாதுகாப்பிற்காக உடன் இருந்த காவலர்களை நியமித்தும் எதிரிகளுடன் காங்கேயம் காவல் நிலையம் வந்து காலை 9.45 மணிக்கு எதிரிகள் மீது காங்கேயம் காவல் நிலைய குற்ற எண்.1184/2020 U/s. 4-(1)(a)(b)(g) r/w 4 1 A TNP ACT ல் வழக்குப்பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும் மற்றொரு நகலை புலன் விசாரணைக்காக காங்கேயம் வட்ட ஆய்வாளர் திரு.ரவிக்குமார் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

கடந்த 17.05.2020 ஆம் தேதி கொரோனா ஊரடங்கு அமலில் இருந்த நாள் என்றால் சரிதான். சம்பவ இடமானது தென்னை கீற்றால் ஆன சாலை என்றால் சரிதான். ஊரடங்கு என்பதால் வாரச்சந்தைகள் எதுவும் கூடவில்லை என்றால் சரியல்ல. ஆட்டுச்சந்தை நடக்கவில்லை. கைப்பற்றுதல் மகஜர், பார்வை மகஜர், அழித்தல் மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் எல்லாவற்றிலும் ஒரே நபர் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகளான சரவணக்குமார், ஜோஸப் ஆனந்த் ஆகியோர்கள் ஆடு வாங்க மருதுரை பகுதிக்கு வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அழித்தல் மகஜர் நான் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடமான தென்னங்கீற்றாலான சாலையில் மின் வசதி இல்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் கணிணியில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமுலம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் மின் வசதி இல்லாத நிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கணிணியில் தயார் செய்ய வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் கைப்பற்றியதாக சொல்லும் திரவத்தை தானாகவே விஷசாராயம் என்று முடிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் எனது அனுபவத்தின் அடிப்படையில் விஷ சாராயம் என்று முடிவுக்கு வந்தேன். இரசாயன பகுப்பாய்வில் என்னால் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் திரவம் விஷ சாராயம் இல்லை என அறிக்கை பெறப்பட்டது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் சாட்சியில் ஒருவர் பாப்பினி கிராமத்தை சேர்ந்தவர் என்றும் மற்றொருவர் ஜோஸப் ஆனந்த் சிவன்மலையை சேர்ந்தவர் என்றும் சொன்னால் சரிதான்.

மேற்படி நபர்கள் வெவ்வேறு ஊரைச் சேர்ந்தவர்களாக இருக்கும் நிலையில் ஊரடங்கு உத்தரவு காலத்தில் ஆட்டு வியாபாரம் செய்ய மருதுரை கிராமத்திற்கு வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அவர்கள் ஆடு வாங்க வந்தார்கள். சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றும், என்னால் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் சம்பவ இடத்தில் வைத்து பெறப்படவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.17 18:29:34 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்